**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)

அமர்வு வழக்கு எண். 173/2025

நாள்: 07.03.2026.

அரசு தரப்பு சாட்சி: 14

சாட்சி விசாரணையை காணொளி மூலம் நடத்துவதற்கு அரசு தரப்பில் மனு தாக்கல் செய்து எதிரி தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் சாட்சி காணொளி மூலம் வரவழைக்கப்பட்டுள்ளார். அரசு தரப்பு வழக்கறிஞர் உள்ளார். எதிரி தரப்பு வழக்கறிஞரும் உள்ளார். சாட்சி திருவள்ளூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் உள்ள காணொளி அரங்கத்தில் அமர வைக்கப்பட்டு சாட்சி காணொளி மூலம் நீதிமன்றத்திலுள்ள திரையில் இணைக்கப்பட்டுள்ளார். சாட்சியின் அருகில் காணொளி மூலம் விசாரணை செய்வதற்கு உதவியாக **Thiru.C.Maheskumar, Assistant Programmer,** முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருவள்ளூர் என்பவர் உள்ளார். சாட்சி கூடுதல் மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம் Grade-I Bench Clerk **திருமதி. M.ஜானகி** என்பவர் மூலம் பிரமாணம் செய்யப்பட்டார். சாட்சியின் அருகே வேறு யாரும் இல்லை என உறுதிப்படுத்தப்பட்டு சாட்சியின் அடையாளமும் உறுதிப்படுத்தப்பட்டபின் விசாரணை தொடர அனுமதிக்கப்பட்டது.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சியாகிய மருத்துவர் திரு.R.அரவிந்த், வேல்ஸ் மருத்துவமனை, சென்னை என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் வருடத்திய சட்டப் பிரிவு 10-ன் படி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.07 13:43:50 +0530

| | | |
|---|---|---|
| Name | : | டாக்டர்.R.அரவிந்த் |
| Husband / Father Name | : | ராஜகோபால் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | மருத்துவர் |
| Age | : | 31 |

**(எதிரி ஆஜர். )**

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது சென்னை வேல்ஸ் தனியார் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.01.2025 ம் தேதி இராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்தேன். அன்றைய தினம் பாம்பன் காவல் நிலைய ஆய்வாளர் மேற்படி காவல் நிலைய குற்ற எண்.6/2025 வழக்கில் இறந்துபோன கென்னடி என்ற ஜோசப் கென்னடி வயது 58 த/பெ.மனுவேல் என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து அறிக்கை பெற கொடுத்த வேண்டுகோளின்படி பாம்பன் காவல் நிலைய முதல்நிலை காவலர் 1041 நாகராஜன் அடையாளம் காட்டிய பிரேதத்தை மதியம் 01.35 மணியளவில் பிரேத கூராய்வு செய்ய ஆரம்பித்தேன். அந்த பிரேதத்தை நான் பரிசோதனை செய்தபோது கீழ்கண்ட வெளிக்காயங்கள் காணப்பட்டது.

1. வலதுபுஜம் நடுப்பகுதி முன்புறத்தில் 10 X 4 cm அளவில் தசைஆழம்வரை வெட்டுக்காயம் காணப்பட்டது. அதன் கீழ் உள்ள இரத்தநாளங்கள், நரம்புகள் மற்றும் தசைகள் வெட்டுப்பட்டிருந்தன.

2. இடதுமார்பில் மேல்பகுதியில் 3 X 0.5 cm அளவில் சிராய்ப்புக்காயம் காணப்பட்டது.

3. இடது வயிற்றுப்பகுதியில் 2 X 0.5 cm அளவில் சிராய்ப்புக்காயம் காணப்பட்டது.

4. தாடையின் வலதுபகுதியில் 3 X 2 X 1 cm அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

சிராய்ப்புக்காயங்கள் சிவந்தநிலையில் காணப்பட்டது.

உடல் உள்ளுறுப்புகளை ஆய்வு செய்ததில் தலைப்பகுதி முழுவதும் சீரானநிலையில் இருந்தது. மூளை கபாலம் ஆகியவை சீரானநிலையில் இருந்தது. கழுத்துப்பகுதியில் வாய், நாக்கு மற்றும் கழுத்துப்பகுதி சீராக இருந்தது. தொண்டை மற்றும் கழுத்து

C MOHAN RAM Digitally signed by C MOHAN RAM Date: 2026.03.07 13:43:57 +0530

எலும்புகள் சீராக இருந்தது. மார்பு பகுதியில் விலா எலும்புகள் மற்றும் மார்புசுவர், உணவுக்குழாய், சுவாசகுழாய் சீராக இருந்தது. நுரையீரல்கள் சீராக இருந்தது. நுரையீரல்கள் வெளிறி காணப்பட்டது. இதயம் சீராக இருந்தது, இதய அறைகள் காலியாக இருந்தன. இதயத்தை சுற்றி 10 மிலி அளவில் மஞ்சள் திரவம் காணப்பட்டது. வயிற்றுபகுதியை திறந்து பார்த்தபோது வயிற்றில் வெள்ளை பழுப்பு நிறத்தில் 80 மிலி அளவில் நெடியுடன் கூடிய சளிபோன்ற திரவம் வெளிர் நிறத்தில் காணப்பட்டது. சிறுகுடலில் குறிப்பிட்ட எதுவும் மணமின்றி 50 மிலி அளவில் பித்ததிரவம் காணப்பட்டது. பெருங்குடலில் வாயு மற்றும் மலம் இருந்தது. கல்லீரல், கணையம், சிறுநீரகங்கள், மண்ணீரல் சீராக இருந்தது. அவைகள் வெளிறி காணப்பட்டது. சிறுநீரக சிறுநீர் குழாய் சீராக இருந்தது. இடும்பு எலும்புகள் சீராக இருந்தது. ஆண் உறுப்பு சீராக இருந்தது. முதுகுதண்டுவடம் சீராக இருந்தது. உடல் உள்ளுறுப்புகளை இரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து கிடைக்கப்பெற்ற அறிக்கையின்படி உள்ளுறுப்புகளில் எத்தில் ஆல்கஹால் இருந்ததாக கிடைக்கப்பட்ட அறிக்கையின் படி இறந்தநபர் பிரேத பரிசோதனைக்கு முன்பு 12 – 24 மணிநேரத்திற்குள்ளாக அவருக்கு ஏற்பட்ட காயத்தினால் ஏற்பட்ட இரத்தப்போக்கு மற்றும் அதிர்ச்சியினால் இறந்திருக்ககூடும் என்றும், அவருக்கு வலதுமேல்கையில் ஏற்பட்ட வெட்டுக்காயத்தினால் இரத்தப்போக்கு ஏற்பட்டு அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியினால் இறந்திருக்கக்கூடும் என கருத்து வழங்கினேன். நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.10**. இறுதி கருத்து அறிக்கை **அ.சா.ஆ.11**. வலதுகை முன்புறத்தில் 1வது காயம் ஏற்பட்டுள்ளது. இறந்த நபருக்கு ஏற்பட்ட வெட்டுக்காயங்கள் அருவாள் போன்ற ஆயுதங்களால் தாக்கினால் இறப்பு ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

இறந்த நபர் இறப்பதற்கு முன்பாக அதிக போதையில் இருந்திருக்கக்கூடும் என்று சொன்னால் சரிதான். போதையில் இருந்ததால் நிதானம் தவறுவதற்கு வாய்ப்புண்டு என்றால் சரிதான். இறந்த நபருக்கு ஏற்பட்டிருந்த 2, 3 காயங்கள் கரடுமுரமான பொருளில் விழும்போதோ, இரண்டு நபர்கள் கட்டிப்புரண்டு உருண்டு சண்டைபோடும்போது ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். 4வது காயம் இரண்டு

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.07 13:44:02 +0530

நபர்கள் கட்டிப்புரண்டு உருண்டு சண்டைபோடும்போதோ அல்லது போதையில் இருக்கும்போது தவறி ஒரு கூர்மையான பகுதியில் இடித்துக்கொள்ளும்போது ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். 1வது காயம் போதையில் இருக்கும்போது ஒரு படகிலோ அல்லது பொதுவான இடங்களிலோ கட்டிப்புரண்டு சண்டைபோடும்போதோ அல்லது போதையில் தவறி கூர்மையான பகுதியில் விழும்போதோ அல்லது கூர்மையான கொக்கி போன்ற பகுதி பிடித்து இழுக்கும்போதோ ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரியல்ல. நான் பிரேத பரிசோதனை செய்வதற்கு முன்பாக என்னிடம் அருவாள் காட்டப்பட்டதா என்றால் இல்லை, பிரேத பரிசோதனைக்கு பின்பு காட்டி கேட்டார்கள். எந்த தேதியில் காட்டிக்கேட்டார்கள் என்று ஞாபகமில்லை. பிரேத பரிசோதனைக்கு முன்பாக வழக்கின் சரித்திரம் கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்பட்டது. இறந்த நபரின் முக்கிய உள்ளுறுப்புகளில் காயம் எதுவும் இல்லை என்றால் சரிதான். 1வது காயத்தினால் ஏற்பட்ட அதிக இரத்தப்போக்கினால்தான் இறந்திருக்கக்கூடும் என்றால் சரிதான். காயம்பட்ட நபரை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு சென்று உரிய சிகிச்சை வழங்கப்பட்டிருந்தால் அவர் பிழைத்திருக்கக்கூடும் என்றால் சரியல்ல. 10 நிமிடத்தில் மருத்துவமனைக்கு கொண்டுசென்றிருந்தால் ரத்தநாளங்களை சரிசெய்து பிழைத்திருக்க செய்திருக்கலாம் என்றால் சரியல்ல. பிரேத பரிசோதனைக்கு முன்பு வழக்கின் சரித்திரம் கொடுக்கப்பட்டு சரித்திரம் தெரிந்ததால் போலிசாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரேத பரிசோதனைக்கு முன்பாக இறந்தநபர் என்ன ஆடைகள் அணிந்திருந்தார் என எனது அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அந்த ஆடைகளில் மண்துகள்களோ அல்லது வேறுபொருட்களோ இருந்ததாக சொல்லப்படவில்லை என்றால் மண்துகள்களோ, வேறுபொருட்களோ (பாரின் மெட்டீரியல்ஸ்) இல்லை. இறந்த நபரின் இரத்தவகை என்ன வகையை சார்ந்தது என்பதற்கான சோதனை செய்வதற்கு வேண்டுகோள் கொடுத்தேனா என்றால் இல்லை. 1வது காயம் கத்தி அல்லது வாள்போன்ற கூர்மையாக ஆயுதங்களால் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் என் இறுதி கருத்துரை வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.07 13:44:07 +0530

| | | |
|---|---|---|
| Thiru.C.Maheskumar,<br>Assistant Programmer,<br>Principal District Court, Thiruvallur. | Deponent | Tmt.A.Janaki,<br>Gr-I, Bench Clerk,<br>Additional District Court, Ramanathapuram. |
| Coordinator Remote site | | Coordinator Court site |

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.07 13:44:11 +0530